# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
# இலகுவழி மாதிரிப் பரீட்சை - 41

**ஆசிரியர் : P.அம்பிகைபாகன்**

**வினாத்தாள் - 1**

**45 நிமிடங்கள்**

**(அரச பரீட்சையைத் தழுவிய மாதிரிப் பரீட்சை)**

♦ **தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

சோடிச் சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

01. மின்சாரம் - வளி

1)  2)  3) 

02. மன்னர்கள் - போக்குவரத்து

1)  2)  3) 

♦ **குறைந்த தொடர்பு உள்ள உருச் சோடி இருக்கும் அடைப்பைத் தெரிவு செய்க.**

03. 1)  2)  3) 

10

04. 1)  2)  3) 

♦ **தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடை தருக.**

சுத்தமே என்றும் சுகம் அளிக்கும் - தீய
சோம்பலை ஓட்டித் துரத்தும், அம்மா!
இத்தரை வாழ்வைப் பெருக்கும், அம்மா! அதற்கு
ஈடேதும் இல்லையான் சொன்னேன், அம்மா!

கந்தையானாலும் கசக்கியுடு - என்னும்
கற்பனை போற்றி நடப்பாய், அம்மா!
சுந்தர மேனியுண்டாகும், அம்மா! இந்தச்
சுத்தத்தின் நன்மை சிறிதோ? அம்மா!

05. கவிதையில் குறிப்பிடப்படுவது, 'தீய சோம்பலை ஓட்டித் துரத்தும்' என்பது,
1) சோம்பல் சுத்தத்தை உண்டு பண்ணும்.
2) சுத்தம் உற்சாகத்தை உண்டு பண்ணாது.
3) சுத்தம் சோம்பலை அழித்தொழிக்கும்.

06. சுத்தத்தை பேணுவதனால் கிடைக்கக் கூடியது. ஆனால் கவிதையில் குறிப்பிடப்படாத ஒரு விடயம்
1) சுகமான வாழ்வு கிடைக்கும்.
2) தொற்று நோய்கள் பீடிக்காது இருத்தல்.
3) சுத்தத்திற்கு இணையானது ஒன்றுமில்லை.

07. பசியினால் ............. பிச்சைக்காரனுக்கு அப்பா .........

1) சிரித்த - குளிர்பானம் கொடுத்தார்.
2) களைத்த - காசு கொடுத்தார்.
3) வாடிய - உணவளித்தார்.

08. 'ஈடேதும், இல்லையான்' எனும் இரு சொற்களையும் பிரித்தெழுதினால்,

1) ஈடு + ஏதும் , இல்லை + யான்
2) ஈடு + எதுவும் , இல்லை + நான்
3) ஈடு + ஏதும் , இல்லை + நான்

♦ **உவமானத்திற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.**

09. 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தாற் போல்'

1) துன்பத்தின் பின் இன்பம்
2) மீண்டும், மீண்டும் துன்பத்துக்குள்ளாதல்.
3) செய்த தவறை உணர்ந்து திருந்துதல்.

10. "புளியம்பழமும் ஓடும் போல்"

1) இணைபிரியாது ஒற்றுமையாய் இருத்தல்.
2) ஒட்டியும், ஒட்டாமலும் ஒற்றுமையாய் இருத்தல்.
3) மேலும், மேலும் கோபமாக இருத்தல்.

♦ **தொடக்கத்தில் உள்ள உருக்களுடன் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.**

11.



1) 

2) 

3) 

12.



1) 

2) 

3) 

♦ **உருக்களில் காட்டப்பட்டவாறு இரு நுனிகளும் செங்கோணத்தில் வளைத்து பெ... ளைத் தெரிவு செய்க.**

13.



1) 

2) 



14.



1) 

2) 

3) 

15. A இலிருந்து B க்கான மூன்று பாதைகளின் நீளம் கூடிய பாதை எது.

1) 


2) 


3) 


16.

1) 


2) 


3) 

17. இவ்வட்டைக் கீலத்தை முக்கோணிகள் ஒன்றொடொன்று இணையுமாறு சேர்த்து ஒட்டுவதன் மூலம் கிடைக்கும் உருவில் காணப்படும் தட்டையான மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது?



1) 1 2) 4 3) 5

18. கனவுருவை அமைக்கத்தக்க உருவைத் தெரிவு செய்க.

1) 

2) 

3) 

♦ **பிழையான கோவைகளைத் தெரிவு செய்க.**

19. 1) 3 + 3 x 3 = 12 2) 4 x 4 + 4 = 20 3) 5 + 5 x 5 = 50

20. 1) $8 \div 2 \times 4 = 16$ 2) $10 \div 2 \times 5 = 25$ 3) $3 \div 2 \times 3 = 9$

♦ **சரியான கோவைகளைத் தெரிவு செய்க.**

21.
1) 333 + 33 + 3 = 339
2) 444 + 44 + 4 = 482
3) 555 + 55 + 5 = 615

22.
1) 1003 + 103 + 13 = 1123
2) 2003 + 203 + 23 = 2229
3) 3003 + 303 + 30 = 3333

23. செவ்வக வடிவமான மரக்கறித் தோட்டம் ஒன்றின் நீளப்பக்கம் 18 மீற்றர் அகலப் பக்கம் 12 மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 2 மீற்றர் இடைத்தூரங்களில் கம்பித் தூண்கள் உள்ளன. அவ்வாறு உள்ள கம்பித் தூண்களின் எண்ணிக்கை யாது?

1) 26 2) 30 3) 32

24. K இன் மகள் L என்பவள் H இன் தாய் ஆவாள். M இன் தாய் K ஆனவள் C யின் மகள் ஆவாள். இவர்களுள் வயது கூடியவரும், வயது குறைந்தவரும் ஆக உள்ள இருவரும் யாவர்?

1) K, H 2) C, H 3) M, L

♦ **எண்கள் அமைந்துள்ள விதத்தைப் பார்த்து விடையைத் தெரிவு செய்க.**

25. இக்கோலத்தில் A, B ஆகியவற்றுக்குப் பொருத்தமான எண்கள் முறையே யாவை?




1) 1, 28
2) 4, 24
3) 3, 24

26. 


இக்கோலத்தில் C, D ஆகியவற்றுக்குப் பொருத்தமான எண்கள் முறையே யாவை?

1) 3, 6
2) 2, 7
3) 3, 5

27. இக்கோலத்தில் A, B ஆகியவற்றுக்குப் பொருத்தமான எண்கள் முறையே யாவை?

1) 3, 6
2) 3, 8
3) 3, 4



♦ ஒரு வரிசையில் ரூபி தொடக்கத்திலிருந்து 8 ஆவதாக நிற்கின்றாள். அவள் கடைசியிலிருந்து 7 ஆவதாக நிற்கின்றாள் இதற்கேற்ப.

28. நிரையில் எத்தனை பேர் நிற்கின்றனர்?
1) 13 2) 15 3) 14

29. அந்நிரையில் பேபி தொடக்கத்திலிருந்து 3 ஆவதாக நின்றால். அவளுக்குப் பின்னால் எத்தனை பேர் நிற்கின்றனர்?
1) 10 2) 11 3) 12

அட்டவணையிலுள்ள தகவல்களுக்கேற்ப விடை எழுதுக.

| நாள் | தை 5 | தை 22 | மாசி 8 | மாசி 29 | பங்குனி 5 | பங்குனி 18 |
|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 5 | 22 | 39 | 60 | ............. | 78 |

30. பங்குனி 5 ஆந்திகதிக்குப் பொருத்தமான எண்ணிக்கை யாது?
1) 66 2) 65 3) 67

31. எண்ணிக்கை 95 இற்குப் பொருத்தமான திகதி யாது?
1) சித்திரை 3 2) சித்திரை 5 3) சித்திரை 4

இரு வினாக்களிலும் கவிதைகளின் நான்கு வரிகள் மாற்றி எழுதப்பட்டுள்ள விதம் கீழே காணப்படுகின்றன. அவற்றின் சரியான ஒழுங்கு முறைகளைத் தெரிவு செய்க.

32. A ஆகா! ஆகா! ஆனைகள் போல் அவை B மேகம்! மேகம்! வானம் முழுதும்
C அது அசையும் அழகைக் கண்டாயா! D மேகக் கூட்டம் பார்த்தாயா!
1) A B C D 2) B D A C 3) A C B D

33. A உயரே எழுந்த வருகிறது B கடலின் நீரில் பிறந்த மேகம்
C அது உடலும் கறுத்து உப்பிப் பருத்து D காற்றில் சவாரி செய்கிறது.
1) B D C A 2) D C B A 3) B C D A

♦ **சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

34. இன்று புதன் கிழமை நாளைய மறுநாள் 6ந் திகதி வருகிற வாரம் புதன்கிழமை எத்தனையாம் திகதி? ( .......................................... )

35. ஒரு வருடத்தின் மாசி மாதம் 5ந் திகதி வெள்ளிக்கிழமையாயின், அவ்வருடத்தின் தை மாதம் 5ந் திகதி என்ன கிழமைநாள் ஆகும்? ( .......................................... )

36. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் நான்கு கறுப்பு நிறப்பந்துகளும் இரண்டு வெள்ளை நிறப் பந்துகளும் உள்ளன. பந்துக்களைப் பார்க்காமல் ஒரே நிறத்திலான இரு பந்துகளைத் தவறாமல் பெறுவதற்குப் பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்பட வேண்டிய பந்துக்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது? ( .......................................... )

37. உட்பக்கம் தெரியாத அப்பெட்டியில் இரண்டு கறுப்பு நிறப்பந்துகளும், இரண்டு வெள்ளை நிறப் பந்துகளும், இரண்டு மஞ்சள் நிறப் பந்துகளாகவும் ஆறு பந்துகள் இருந்திருந்தால், பந்துகளைப் பார்க்காமல் ஒரே நிறத்திலான இரு பந்துகளைத் தவறாமல் பெறுவதற்குப் பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்பட வேண்டிய பந்துகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது? ( .......................................... )

38. பாடசாலைச் சிற்றுண்டிச்சாலை காலை 8.00 மணிக்கு திறக்கப்படும். அச்சிற்றுண்டிச் சாலையை நடாத்துபவர் 9 லீற்றர் நீர் கொள்ளக்கூடிய ஒரு பானையில் மணித்தியாலத்திற்கு ஒரு தடவை 3 லீற்றர் நீரை நிரப்புவார். ஒவ்வொரு மணித்தியாலத்திலும் மாணவர்கள் ஒரு லீற்றர் வீதம் நீரைக் குடிப்பதற்கு எடுத்து விடுவார்கள். கடைக்காரர் எத்தனை மணிக்கு நீரை இட்ட பின்னர், முதன்முதலாக பானை நிரம்பிக் காணப்படும்? ( .......................................... )

39. குமாரனிடம் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய் நாணயங்களாக 16 நாணயங்கள் உள்ளன. அவற்றுள் ஒரு ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கையை விடை இரண்டு ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை ஒன்று அதிகமாகும். அதே போல் இரண்டு ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கையை விட ஐந்து ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை இரண்டு அதிகமாகும். எனவே குமாரனிடம் உள்ள மொத்தத் தொகை யாது? ( .......................................... )

40. ஒரு துவிச்சக்கர வண்டி மணித்தியாலத்திற்கு 15 கிலோ மீற்றர் வேகத்திலும் ஒரு மோட்டார் சைக்கிள் மணித்தியாலத்திற்கு 45 கிலோ மீற்றர் வேகத்திலும் ஒரே இடத்திலிருந்து ஒரே நேரத்தில் புறப்பட்டன. இரண்டு மணித்தியாலங்களின் பின் அவை இரண்டும் எவ்வளவு தூர வித்தியாசத்தில் காணப்படும்? ( .......................................... )